கொள்கை ஆய்வுக் கழகத்தின் பிரம்மாண்ட முயற்சி: பொன்விழா ஆண்டில் 50 நூல்கள்

# தொகுப்பின் முதல் பத்து நூல்கள் வெளியீடு




50 தலைப்புகளில் 50 நூல்கள் கொண்ட சிங்கப்பூர் வரலாற்றுப் பதிவுகள் தொகுப்பில் நேற்று வெளியீடு கண்ட முதல் பத்து நூல்களின் அட்டை மாதிரி படத்துடன் அவற்றை எழுதிய பத்து எழுத்தாளர்கள். "இந்தியர்கள்" நூலாசிரியர் வினீதா சின்ஹா வலக்கோடியில். **படம்: கொள்கை ஆய்வுக் கழகம்**

சிங்கப்பூரின் பொன்விழாவைச் சிறப்பிக்கும் வகையில் கொள்கை ஆய்வுக் கழகம் மேற்கொண்ட 50 நூல்கள் பதிப்பிப்புப் பணியின் முதல் கட்டமாக நேற்று பத்து நூல்கள் வெளியிடப்பட்டன.

சிங்கப்பூர் வரலாற்றுப் பதிவுகள் (Singapore Chronicles) என்ற கருப்பொருளில், 50 தலைப்புகளில் 50 நூல்களை வெளியிடுவது இந்தப் பிரம்மாண்டமான திட்டத்தின் நோக்கம்.

காலனித்துவ சிங்கப்பூர், அரசமைப்புச் சட்டம், தற்காப்பு, அரசதந்திரம், கல்வி, யுரேசியர்கள், இந்தியர்கள், சட்டம், அதிபர் பதவி ஆகிய 10 தலைப்புகளைக் கொண்ட நூல்களை நிதியமைச்சர் ஹெங் சுவீ கியட் நேற்றுக் காலை அதிகாரபூர்வமாக வெளியிட்டார்.

SG50 செயற்குழுவுக்குத் தலைமை வகிப்பவருமான அமைச்சர் ஹெங், 50 நூல்களை வெளியிடுவது இதுவரை மேற்கொள்ளப்படாத ஒரு முயற்சி என்று பாராட்டினார்.

"கடந்தகாலத்தைப் புரிந்து கொள்ளாமல் எதிர்காலத்தை நம்மால் உருவாக்க முடியாது. நாம் எவ்வளவு தொலைவு கடந்து வந்திருக்கிறோம் என்பதை இந்த நூல்கள் நினைவூட்டுவதோடு, இவை நமது எதிர்காலத்திற்கு மேற்கோளாகவும் இருக்கும்," என்று அமைச்சர் ஹெங் குறிப்பிட்டார்.

சிங்கப்பூரின் பொன்விழா ஆண்டுக்காக இந்தத் திட்டத்தை முன்மொழிந்தவர் கொள்கை ஆய்வுக் கழகத்தின் இயக்குநர் திரு ஜனதாஸ் தேவன். அக்கழகத்தின் துணை இயக்குநர் திரு அருண் மகிழ்நன், திட்ட ஆலோசகர் அசாட் லத்தீஃப் இருவரும் அந்த 50 நூல்களுக்கும் தொகுப்பாசிரியர்களாகச் செயல்பட்டனர்.

"சிங்கப்பூர் வரலாற்றைச் சுருக்கமாக ஆவணப்படுத்துவதே இந்த நூல் தொகுப்பின் அடிப்படை நோக்கம். அமரர் திரு லீ குவான் இயூ உள்ளிட்ட முன்னோடித் தலைவர்கள் எப்படி அடிப்படைச் சவால்களை எதிர்கொண்டார்கள், ஏன் சில அம்சங்களில் மற்ற நாடுகளைப் போலல்லாமல் புதிய பாதைகளை வகுத்துக்கொண்டார்கள் போன்ற அரிய விவரங்களை இந்த நூல் தொகுப்பு எடுத்துக்காட்டும்," என்றார் திரு அருண் மகிழ்நன்.

இந்த முயற்சிக்குச் சவாலாக அமைந்தது எது என்ற கேள்விக்கு, "இவற்றைப் பெரிய பெரிய வல்லுநர்கள், துறை சார்ந்த நிபுணர்கள் எழுதியிருந்தாலும் இவை பொது மக்கள் படித்துப் புரிந்து கொள்ளும் அளவில் எளிமையாக எழுதப்பட வேண்டும் என்பதே மிகப் பெரிய சவால். நூலாசிரியர்களுக்கு நாங்கள் அதனைக் கட்டாயமாக்கியிருந்தோம். எங்கள் எதிர்பார்ப்பு வீண் போகவில்லை," என்றார் திரு அருண்.

பொது மக்கள் வாங்கிப் படிக்க வேண்டும் என்பதால் விலையும் கட்டுப்படியாகக் கூடியதாக இருக்க வேண்டும் என்று தாங்கள் விரும்பியதாகவும் அதற்கு அரசாங்கம் பெரிய அளவில் நிதியுதவி வழங்கியிருப்பதாகவும் திரு அருண் தெரிவித்தார்.

ஒவ்வொரு நூலையும் துறை சார்ந்த நிபுணர்கள் எழுதியுள்ளனர். உதாரணத்திற்கு, "இந்தியர்கள்" என்ற நூலை சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தின் தெற்காசியக் கல்வித் திட்டத் தலைவர் பேராசிரியர் வினீதா சின்ஹா எழுதியுள்ளார்.

ஒவ்வொரு நூலும் 100 முதல் 150 பக்கங்களைக் கொண்டிருக்கும். எஞ்சிய 40 நூல்கள் அடுத்த ஆண்டில் படிப்படியாக பதிப்பிக்கப்படும் என்று கொள்கை ஆய்வுக் கழகம் தெரிவித்தது.

ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் பிரஸ் பதிப்பித்திருக்கும் இந்த நூல்கள் ஒவ்வொன்றும் 16 வெள்ளிக்கு முக்கிய புத்தகக் கடைகளில் விற்பனைக்கு உள்ளன.